Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 136

செவ்வாய்க்கிழமை 11 ஏப்ரல் 2023

பங்குனி 28 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வெளிப்படைத்தன்மை இல்லை

## ஐரோப்பிய ஒன்றியம் விசனம்

**கொழும்பு, ஏப்ரல் 11**

**இலங்கையின் கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடு செய்ய முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் வெளிப்படைத்தன்மை இல்லையென்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.** »10

## இந்தியத் தூதுவருடனான சந்திப்பு முழுத் திருப்தி!!!

### வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர்

யாழ்ப்பாணம், ஏப். 11

இந்தியத் தூதுவருடனான சந்திப்பு திருப்தியாக அமைந்ததாகவும் வெடுக்குநாறி ஆலய விவகாரத்துக்கு விரைவில் தீர்வு கிடைக்க ஆவன »10

போதைப்பாவனை

## பல்கலைக்கழக மாணவர்கள் உளவளத்துணைச் சிகிச்சைக்கு

யாழ்ப்பாணம், ஏப். 11

தடைசெய்யப்பட்ட உயிர்கொல்லிப் போதை மாத்திரைகளை உட்கொண்டார்கள் என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட »10

## குடும்பத்தகராறு ஒருவர் கொலை



மன்னார், ஏப். 11

மன்னார், சாந்திபுரத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற மோதலில் எமில் நகரைச் சேர்ந்த இளைஞர் »10

புதுக்குடியிருப்பில்

## திணைக்கள அனுமதியில்லாமல் போதகரால் முன்பள்ளி இயக்கம்

### மதமாற்றம் நடக்கிறதா?

முல்லைத்தீவு, ஏப். 11

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் போதகரால் நடத்தப்படும் 'நொக்ஸ்' என்ற முன்பள்ளி சட்டவிரோதமாக இயங்குவதாகத் »10

## சா/த பரீட்சை மே 29 இலேயே!

கொழும்பு, ஏப். 11

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. »10

## சாட்சியங்களை அச்சுறுத்த முயன்றாரா போதகர்?

யாழ்ப்பாணம், ஏப். 11

அச்சுவேலியைச் சேர்ந்த போதகர், பெண் ஒருவரின் கழுத்தை நெரித்த வழக்குத் தொடர்பில் சாட்சியங்களை அச்சுறுத்தும் நோக்கத்துடன் செயற்பட்டாரா என்ற கோணத்திலும் »10

## வெப்பகாலத்தில் மீண்டும் தென்னை வெண் ஈ பரவல்

### எச்சரிக்கை விடுக்கிறார் பிராந்திய முகாமையாளர்

கிளிநொச்சி, ஏப். 11

வடமாகாணத்தில் பரவ ஆரம்பித்திருக்கும் தென்னை வெண் ஈயைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென தென்னை பயிர்ச்செய்கை சபையின் »10

## உள்ளூராட்சித்தேர்தல் ஏப்ரல் 25 இல் இல்லை!

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 11

உள்ளூராட்சித் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடத்தப்படாது என மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவது தொடர்பாக உள்ளூராட்சி அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடையில் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. »10

## நெசவுசாலையிலிருந்து மதக்குழுவே வெளியேறுக!

### அச்சுவேலியில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 11

அச்சுவேலி நெசவுசாலையை அத்துமீறிக் கைப்பற்றி அடாவடித்தனம் புரியும் மதமாற்றிகளை அங்கிருந்து வெளியேற்றுமாறு »10

உதயனுக்குள் புகுந்து

## பாதகம் புரிந்த போதகர் உள்ளிட்ட 6 பேர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 11

உதயன் பத்திரிகை அலுவலகத்தினுள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை புகுந்து சண்டித்தனத்தில் ஈடுபட்ட போதகர் மற்றும் »10

கானான் ஜெப ஆலயத்தின்

## தலைமறைவாகிய போதகர் கொழும்பில் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஏப். 11

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலைப் பகுதியில் இயங்கி வரும் கானான் ஜெப ஆலயத்தின் மாணவர் விடுதியில் தங்கி »11

அச்சுவேலி நெசவுசாலையை

## 'அசெம்பிளி ஒஃப் ஜீவவார்த்தை' மதக்குழு ஆட்டையைப் போட்ட கதை!

ஆதித்த கரிகாலன்

உதயன் பத்திரிகைக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்ட போதகரால் நடத்தப்படும் சபைக்குரிய காணி அவருக்குச் சொந்தமானது அல்ல. ஒட்டுக்குழுவாக இயங்கிய அரசியல் கட்சியின் தயவாலேயே கிடைக்கப்பெற்றது.

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
ரூ. 112,000/=
அதிகபட்ச இரகசியதன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
செலான் வங்கி
Fitch Rating: "A-" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

# மனித உரிமை தொடர்பான அறிவில்லாதோர் நியமனம்!

### ரோகிணி மாரசிங்க குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஏப். 11**

**மனித உரிமைகள் என்றால் என்ன? என்பதைப் புரிந்து கொண்டவர்களை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு நியமிக்கவேண்டும். அதைவிடுத்து மனித உரிமைகள் குறித்து சிறிதளவும் அறிவில்லாதவர்களை உறுப்பினர்களாக நியமித்தமை மனித உரிமைகளுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ரோகிணி மாரசிங்க.**



இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவருக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் இடையில் அண்மைக்காலமாக கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனித உரிமைகள் குறித்து சிறந்த புரிந்துணர்வு கொண்டவர்களை ஆணைக்குழுவுக்கு நியமிக்க வேண்டும் என நான் ஜனாதிபதிக்குத் தெரிவிக்கவிரும்புகின்றேன். அவ்வாறான நியமனங்களை மேற்கொள்ளாத பட்சத்திலேயே இவ்வாறான குழப்பநிலை ஏற்படுகின்றது. ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களுக்கும் மனித உரிமைகள் குறித்து எதுவும் தெரியாது. அவர்கள் கூட்டங்களுக்குக் கூட சமுகமளிப்பதில்லை. அவர்கள் எதுவும் செய்வதில்லை. மனித உரிமை ஆணைக்குழுவின் பணியாளர்களிடம் அவர்கள் தொடர்பில் கேட்கவேண்டும். அவர்கள் அனைத்து விடயங்களையும் தெரிவிப்பார்கள் - என்றார். (ம-14,இ)

## உணவுக்கான பணவீக்கம் இலங்கையில் சீராகின்றது

கொழும்பு, ஏப். 11

உணவுக்காக இலங்கையில் ஏற்பட்டிருந்த பணவீக்கம் சீராகின்றது என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கி உணவுக்கான பணவீக்கம் அதிகம் உள்ள நாடுகள் தொடர்பான பட்டியலை அவ்வப்போது வெளியிட்டு வருகின்றது. கடந்த நவம்பர் மாதம் வெளியிடப்பட்ட இந்தப் பட்டியலில் இலங்கை 6ஆவது இடத்திலிருந்தது. நேற்றுமுன்தினம் புதுப்பிக்கப்பட்ட இந்தப் பட்டியலில் இலங்கை 10ஆவது இடத்துக்கு தரப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது உணவுக்கான பணவீக்கம் இலங்கையில் குறைந்து வருவதையே இந்தத் தரப்படுத்தல் காண்பிக்கின்றது என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த நவம்பர் மாதம் உணவுக்கான பணவீக்கம் 86 வீதமாகக் காணப்பட்ட நிலையில் தற்போது அது 54 வீதமாகக் குறைந்துள்ளது.

உலக வங்கியின் தரப்படுத்தலுக்கமைய லெபனான், சிம்பாப்பே, ஆர்ஜென்டீனா, ஈரான், துருக்கி, எகிப்து, ருவாண்டா, கானா, சுரினாம் ஆகிய நாடுகள் முறையே ஒன்று தொடக்கம் ஒன்பது வரையிலான இடங்களில் உள்ளன. (ம)

## அரசின் அராஜகப் போக்கு சர்வாதிகார வெளிப்பாடே!

### தொழிலாளர் சம்மேளன கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 11

ஆரம்ப காலந்தொட்டு இனவாத நிகழ்ச்சி நிரலில் தமிழர்களின் அடையாளங்கள், கலாசாரங்கள், பண்பாட்டுப் பாரம்பரியங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. தமிழர்கள் மீது மேற்கொள்ளும் அடக்குமுறைகளில் அரசின் சர்வாதிகாரம் வெளிப்படுகின்றது - இவ்வாறு அகில இலங்கை தொழிலாளர் சம்மேளன கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. ஜனநாயக விரோத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. காலம் காலமாக தமிழர்கள் சிங்கள இனவெறி பிடித்த அரசுகளால் அடக்கியொடுக்கப்படுகிறார்கள். தமிழர்களின் அடையாளங்கள், கலாசாரங்களை சிங்கள - பௌத்தமயமாக்கல் மூலம் திரிபுபடுத்த முயற்சிகள் நடக்கின்றன.

தொல்லியல் திணைக்களத்தின் ஊடாக குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி - இந்துமதத்துக்கு சவால் விடும் வகையில் விகாரை கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. வெடுக்குநாறிமலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் தகர்த்தெறியப்பட்டுள்ளது. தமிழர் பகுதியில் இனமுறுகலை ஏற்படுத்தி சுதந்திரத்துக்கு அச்சம் ஏற்படுத்தப்படுகிறது. இதற்கெதிராக மேற்கொள்ளும் போராட்டங்களை ஒடுக்குவதற்காக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்த எத்தனிக்கப்படுகின்றது. தமிழர்களுக்கு இறுதியாக உள்ள ஆயுதம் ஒற்றுமை மட்டுமே. இந்தச் சட்டத்தை அனைத்துத் தமிழ்த் தரப்பும் எதிர்க்கவேண்டும்- என்றார். (ச)

## மதக்குழு வெறிச்செயல் கண்டிக்கப்படவேண்டும்

### இந்துக் குருமார் அமைப்பு வேதனை

யாழ்ப்பாணம், ஏப். 11

பல்வேறு அச்சுறுத்தல்களை சந்தித்து உண்மைகளை வெளிக்கொண்டுவரும் 'உதயன்' பத்திரிகைமீது நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவம் வேதனையளிக்கின்றது என இந்துக் குருமார் அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவஶ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வரக் குருக்கள் தெரிவித்ததாவது:

ஊடக தர்மத்தைப் பேணி நெருக்கடியான சூழ்நிலையிலும் மக்களின் விடிவுக்காக அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் 'உதயன்' பத்திரிகை துணிச்சலாக செய்திகளை வெளியிடுகின்றது. இந்தநிலையில் அச்சுவேலி மதக்குழுவால் புரியப்பட்ட காட்டுமிராண்டித்தனத்துக்கு நியாயம் கிடைக்கும் வகையில் பிரசுரித்த செய்திக்காக அந்த மதக்குழு உதயன் அலுவலகத்துக்குள் புகுத்து அட்டூழியம் புரிந்துள்ளது. இது வேதனைக்குரிய விடயமாகும். இந்த வன்முறைச் சம்பவம் கண்டிக்கப்பட வேண்டும். அநீதியைத் தடுத்து பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டி நிற்கின்றோம் - என்றார். (ச)

## போராடினால்தான் நீதி கிடைக்கும்!

### மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆதங்கம்

கொழும்பு, ஏப். 11

ஈஸ்டர் தாக்குதல் நடந்து 4 ஆண்டுகள் ஆகியும் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி இன்னமும் கிடைக்கவில்லை. சிறிதளவேனும் முன்னேற்றம் இடம்பெறவில்லை. நீதி கிடைக்க நாம் போராடுவது முக்கியமானதாகும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் நடந்து 4 ஆண்டுகள் கடந்துள்ளன. இன்றுவரையில் இந்த விசாரணையில் சிறிதளவு முன்னேற்றம்கூட இடம்பெறவில்லை. இந்தப் பின்புலத்தில் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நீதி கிடைக்கும். ஈஸ்டர் தாக்குதல் ரணில் - மைத்திரி அரசாங்கத்தை முக்கியமாக ரணில் விக்கிரமசிங்கவை பின்னுக்குத் தள்ளியது. கோத்தாபய ராஜபக்சவின் செல்வாக்கை இரட்டிப்பாக்கியது. ஆயினும் ஈஸ்டர் தாக்குதலால் ஆட்சியை இலகுவாக கைப்பற்றிய கோத்தாபய மக்கள் கிளர்ச்சியால் விரைவாக கதிரையை இழந்தார். எனவே இளையோர் சில மாற்றங்களைக் கொண்டுவர - நீதியைப் பெற்றுக்கொள்ள போராடுதல் முக்கியமானதாகும்.- என்றார். (ச-இ)

## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தால் சிவில் சமூகத்தினருக்கு ஆபத்து!

### தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டு

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஜனநாயகப் பரப்பிலும் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு இருக்கும் உரிமைகளிலும் எதிர்மறையான தாக்கத்தைச் செலுத்தக்கூடியதாக உள்ளது என்று தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்;

எந்தவொரு சட்டத் திருத்தத்திலும் அடிப்படை உரிமைகள் மற்றும் குடிமக்களின் பாதுகாப்பு என்பன உத்தரவாதப்படுத்தப்படவேண்டியது அவசியமாகும். எல்லாவற்றுக்கும் மேலாக அரசமைப்பின் பிரகாரம், மக்களின் அதிகாரம் அவர்களின் பயனுக்காகவே அரசாங்கத்துடன் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இவ்விரு குறிக்கோள்களையும் அடையத் தவறுகிறது. அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டிருக்கும் புதிய சட்டமூலம், அது பதிலீடு செய்ய உத்தேசிக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தையும்விட மிகவும் மோசமான பல அம்சங்களைக் கொண்டதாக இருக்கிறது.

தனியார் சொத்துக்கள் திருடப்படுவது, தொழிற்சங்க நடவடிக்கை என்பவற்றைக்கூட இந்தச் சட்டம் பயங்கரவாதச் செயல்கள் என்று அடையாளப்படுத்தி வியாக்கியானப்படுத்துகிறது. எதிர்ப்புக் காட்டுதல், பிரசுரங்களை வெளியிடுதல், அரசாங்கத்திடம் இருந்து நடவடிக்கைகளை எதிர்பார்த்து கோரிக்கைகளை முன்வைத்தல் மற்றும் இன, மத குலங்களுடன் தொடர்புடைய தகராறுகள் உட்பட பெருவாரியான, நியாயபூர்வமான நடவடிக்கைகளை இந்தச்சட்டமூலம் பயங்கரவாத வீச்செல்லைக்குள் கொண்டு வருகிறது. 'பயங்கரவாதம்' என்ற காரணத்தைக் கூறி அரசியல் செயற்பாடுகளை ஒடுக்குவதில் நாட்டம் கொண்ட மனப்போக்கே இந்தச் சட்டவரைவில் தெரிகின்றது.

ஒருவரைக் கைதுசெய்யும் பொலிஸாரோ அல்லது இராணுவத்தினரோ, கைதானவரை தாங்கள் தெரிவுசெய்யும் ஓர் இடத்தில் 24 மணித்தியாலங்கள் வரை தடுத்துவைப்பதற்கு புதிய சட்டமூலம் அனுமதிக்கிறது. நிலைவரத்தை பொறுத்து அவரை மேலும் கூடுதலான நேரம் தடுத்துவைக்க முடியும். இவ்வாறு கைதுசெய்யப்படக்கூடிய ஓர் இளைஞர் அல்லது யுவதியின் அவலத்தை நினைத்துப் பாருங்கள் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக அமைதி பேணாமை மதங்களுக்கு தலைகுனிவு

## உதயனுக்குள் நிகழ்த்தப்பட்ட அடக்குமுறைக்கு கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக்குழு சீற்றம்

**யாழ்ப்பாணம், ஏப். 11**

**பாதிக்கப்பட்டோருக்கு நியாயம் கிடைப்பதற்கு வழிகோலும் வகையில் செய்தியை பிரசுரித்தமைக்காக 'உதயன்' பத்திரிகை அலுவலகத்தை முற்றுகையிட்டு ஊடக சுதந்திரத்தை அச்சுறுத்திய காட்டுமிராண்டித்தனம் கண்டிக்கத்தக்கது.**

இவ்வாறு யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்பணி எஸ்.வி.பி.மங்களராஜா வெளியிட்ட கண்டன அறிக்கையில் உள்ளதாவது:

'உதயன் பத்திரிகை நடுநிலை வகிக்கும் பத்திரிகை. ஆதாரமின்றி செய்திகளை 'உதயன்' வெளியிடுவதில்லை என்பது எமது அனுபவம். இந்த நிலையில் மதத்தின் பெயரால் நடைபெறும் அநீதியை வெளிப்படுத்தியமைக்காக மதக்குழு ஒன்று உதயன் அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்து அட்டகாசம் புரிந்துள்ளது. ஊடகப் பணியாளர்களை அச்சுறுத்தியுள்ளது.

இவ்வாறான குழுக்கள் சமூக அமைதி, மத நல்லிணக்கத்துக்கு மட்டுமன்றி ஊடக சுதந்திரத்துக்கும் தற்போதுபெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளன.

பேச்சுக்கள் ஊடாகத் தீர்வு காண்பதுதான் முறைமையாகும். அவ்வாறின்றி தாம் புரியும் சமூக அட்டூழியங்களை மூடி மறைப்பதற்காக ஆட்களைத் திரட்டி ஊடக சுதந்திரத்தை அச்சுறுத்தும் வகையில் செயற்படுவது எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. இது எமது மதங்களுக்கு ஏற்படும் தலைகுனிவே. எந்தவொரு சமயமும் வன்முறையை ஆதரிப்பதில்லை. சமய நல்லிணக்கம் தற்போதைய தேவைகளில் எமக்குக் கட்டாயமாகும். எனவே மதத்தின் பெயரால் நடைபெறும் அநீதியைத் தடுத்து சமூக நீதியை நிலைநாட்ட உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றுள்ளது. (ச)

# அடாவடித்தனங்கள் மூலம் உதயனை அடக்கமுடியாது

## இந்துசமயப் பேரவைத் தலைவர் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 11

அறத்தைப் போதிக்கும் பைபிளை கையில் வைத்து அட்டூழியம் புரிவது இயேசு பிரானுக்குச் செய்யும் துரோகமிழைப்பே. அடாவடி மூலம் உதயனை அடக்கலாம் - உண்மையை மறைக்கலாம் என எண்ணுவது மடமைத்தனம்.

இவ்வாறு இந்து சமயப் பேரவைத் தலைவர் சிவ.சக்திகிரீவன் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

போதகர் தலைமையில் மதக்கும்பல் ஒன்று உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை புகுந்து அச்சுறுத்தல் புரிந்துள்ளது. இந்த காட்டுமிராண்டித்தனம் அநீதியை வெளிக்கொணரும் ஊடக தர்மத்தை நசுக்கும் செயலாகும். சாமானிய ஒரு மனிதன்கூட ஊடக நிறுவனத்தின் அலுவலகத்துக்குள் நுழைந்து அடாவடித்தனம் செய்ய அஞ்சுவான்.

ஆனால் அறத்தைப் போதிக்கும் பைபிளை கையில் வைத்துக்கொண்டு அட்டூழியம் புரியப்பட்டுள்ளது. இந்தச் செயல் இயேசு பிரானுக்குச் செய்யும் துரோகமே. பத்திரிகை காலக்கண்ணாடி என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அடாவடியால் உண்மையை மறைக்கலாம் என எண்ணுவது மடமைத்தனமே- என்றார். (ச)

# ஊடகத்தை அச்சுறுத்துவது சமூக ஆரோக்கிய செயலல்ல!

## கிளிநொச்சி ஊடக அமையம் கண்டனம்

கிளிநொச்சி, ஏப். 11

உதயனுக்கு எதிராக மதக்குழுவொன்றால் நேற்றுமுன்தினம் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு கிளிநொச்சி ஊடக அமையம் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் கிளிநொச்சி ஊடக அமையம் விடுத்துள்ள அறிக்கையில்,

எம் இனத்துக்குள்ளேயே ஊடகங்களின் செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுக்குமளவுக்கு ஊடக நிறுவனங்களுக்குள் அத்துமீறி உள்நுழைந்து செயற்படுவது கண்டிக்கத்தக்கது. ஊடகங்களில் வெளியிடப்பட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானது அல்லது அவதூறானது எனக் கருதும் தரப்பு அதற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர வன்முறையில் ஈடுபடுவது, அச்சுறுத்துவது என்பன அனுமதிக்க முடியாத செயற்பாடுகள்.

உதயன் பத்திரிகையின் அலுவலகத்துக்குள் நுழைந்து அச்சுறுத்தும் வகையில் ஒரு குழுவினர் நடந்துகொண்டமை கவலையளிப்பதோடு, அதற்கு நாம் வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம். மதத் தலைவர்கள் வன்முறைகளை ஊக்குவிக்கும் வகையில் இருக்கக்கூடாது என்பதனையும் வலியுறுத்துகிறோம் - என்றுள்ளது. (ம-113)




**போதகர் தலைமையில வந்த பாதகர் கும்பலைப் பற்றி பேப்பரிகளிலையும், வெப்சைட்டுகளிலையும், பேஸ்புக்கிலையும் எல்லாரும் வாசிச்சு அறிஞ்சிருப்பியள். அதால அந்தக் கும்பல் செய்த கூத்தை பட்சி சொன்னால் அது அரைச்ச மாவை திரும்ப அரைச்சமாதிரி இருக்கும். எண்டாலும் இதில கனபேருக்குத் தெரியாத ஒரு விசயத்தை சொல்லித்தான் ஆகோணும் கண்டியளோ. இந்தச் சண்டித்தனத்துக்கு அந்தக் கும்பல் எப்பிடி வெளிக்கிட்டவை எண்டதுதான் அந்தத் தகவல்.**

**போதகரின்ர சபைக்கு பக்கத்து வீட்டில இருக்கிற ஒரு பெண் வங்கி உத்தியோகத்தரின்ர கழுத்தை நெரிச்சதுக்கு முதலில அவை பொலிஸில போக முறைப்பாடு எடுக்கேலை. பிறகு அவை கழுத்தை நெரிச்ச காயத்துக்கு ஆஸ்பத்திரிக்குப் போய், சிகிச்சை எடுக்கேக்கதான் அதைப் பொலிஸ் பதிவு செய்து, பிறகுதான் முறைப்பாட்டை எடுத்தவை. அந்த முறைப்பாட்டை வைச்சு இப்பிடி காட்டுமிராண்டித்தனமா கழுத்தை நெரிச்ச போதகர், அவரின்ர மகன், இன்னொராள் எண்டு மூண்டு பேரை அரெஸ்ட் பண்ணி, இரவே பிணையில விட்டிட்டினம்.**

**விடிஞ்சால் ஈஸ்டர். ஈஸ்டருக்கு அவையின்ர சபையைச் சேர்ந்த ஆக்கள், தூர இடத்தில இருந்தெல்லாம் வருவினம். அப்பிடி எல்லாரையும் வரச்சொல்லி போதகர் போன் பண்ணி கூப்பிட்டிருக்கிறார். 'ஈஸ்டருக்கு ஆராதனையோட இந்தமுறை விருந்தும் இருக்கு' எண்டு போதகர் சொன்னதை நம்பி எல்லாரும் சபைக்குப் போயிருக்கினம்.**

**அங்க போனபிறகு, அண்டைக்கு ஈஸ்டர் ஆராதனைக்கு பதிலா, உதயனுக்கு அர்ச்சனை தான் நடந்ததாம்.**

**'இப்பிடியெல்லாம் எங்களைப் பற்றி பேப்பரில வந்தால் பிறகு அதை வாசிச்சிட்டு, வெளிநாட்டில உள்ள எங்களுக்கு காசு தாறவை தராமால் விட்டிடுவினம். அதால சபைக்கு மட்டுமில்லை உங்களுக்கும் தான் இழப்பு' எண்டு போதாகர் தன்ர விசுவாசியளை உசுப்பேத்தி இருக்கிறார். அவ்வளவுதான், எல்லாரும் கோழி இறைச்சியோட சாப்பிட்டிட்டு, அது செமிக்கமுதலே, படையெடுத்துக்கொண்டு பஸ்ஸில அச்சுவேலிப் பொலிஸுக்குப் போய் 'எப்பிடி அந்தச் செய்தியைப் பேப்பருக்கு குடுப்பியள்? 'எண்டு கத்தியிருக்கினம். அதுக்கு பொலிஸ்காரர்' நடந்ததைத்தான் பேப்பரில எழுதி இருக்கினம். செய்தி பொலிஸால மட்டுமோ போகும்? கோர்ட்ஸாலயும் போகும்' எண்டு சொல்லிக் கலைச்சு விட்டிட்டினம்.**

**ஆனால், பிறகும் போதகரை கெடுகாலம் விடேலை. 'திருப்படா பஸ்ஸை உதயனுக்கு' எண்டு அப்பிடியே பஸ்ஸையும், பட்டா வாகனத்தையும் யாழ்ப்பாணத்துக்கு விட்டிருக்கினம். ஆனால் , அதுக்குப் பிறகு பிணையில வந்த போதகர் தன்ர பாதகர் கும்பலால விட்ட சண்டித்தனத்துக்கு , இரவோட இரவா பொலிஸ் பிடிச்சு இப்ப தன்ர கும்பலோட மறியலுக்கு போற அளவுக்குப் போட்டுது. சண்டித்தனக் கும்பலில வந்த சிலரின்ர படங்கள் பேப்பரில வந்தது. அதில இருக்கிற எல்லாரையும் ஒவ்வொருத்தரா பொலிஸ் பிடிச்சிக் கொண்டிருக்குது. இன்னும் கொஞ்சப்பேரை பிடிக்கவும் போகுதெண்டு அறிஞ்சு, பஸ்ஸில வந்த போதகரின்ர பாதகர் கும்பலில இருந்த கனபேர் ரண்டு நாளா தலைமறைவாம். உதைத்தான் சொல்லுறது 'ஆழமறிஞ்சு காலை விடோணும்' எண்டு.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப்பந்து வரை பரபரப்பு லக்னோவுக்கு 'த்ரில்' வெற்றி


பெங்களூர் சின்னசுவாமி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஐ.பி.எல். தொடரின் 15 ஆவது ஆட்டத்தில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை துரத்தியடித்து வெற்றியைப் பதிவு செய்தது லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார் லக்னோ அணித்தலைவர் கே.எல். ராகுல். இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆர்.சி.பி. அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அபாரமான தொடக்கத்தை வழங்கினர். ஒரு முனையில் கோலி அடித்தாட மறு முனையில் டூ பிளஸிஸ் நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் அவருக்கான இணைப்பாட்டத்தை வழங்கினார். 4 சிக்ஸர்கள், 4 பவுன்டரிகள் அடங்கலாக 44 பந்துகளில் 61 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்த நிலையில் கோலியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து களமிறங்கிய மக்ஸ்வெல்லுடன் இணைந்து டூ பிளஸிஸும் லக்னோவின் பந்து வீச்சாளர்களை அடித்து நொறுக்க ஆர்.சி.பியின் ஓட்டவேகம் அதிகரித்தது. நிறைவில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது ஆர்.சி.பி., டூ பிளஸிஸ் ஆட்டமிழக்காமல் 5 சிக்ஸர்கள், 5 பவுன்டரிகள் உள்ளடங்கலாக 46 பந்துகளில் 79 ஓட்டங்களையும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய மக்ஸ்வெல் 29 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 6 சிக்ஸர்கள், 3 பவுன்டரிகள் அடங்கலாக 59 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மார்க் வூட், அமித் மிஸ்ரா தலா ஓர் விக்கெட்டை வீழ்த்தினர்.

213 என்ற சவாலான இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய லக்னோ அணிக்கு ஆரம்பம் சோதப்பலாகவே அமைந்தது. கைல் மையர்ஸ் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த ஹூடா மற்றும் குருனால் பாண்டியாவும் ஏமாற்ற 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது லக்னோ. ஒருமுனையில் ராகுல் நிலைத்து நிற்க மத்திய வரிசையில் நுழைந்த ஸ்ரொய்னிஸ் லக்னோவின் ஓட்ட எண்ணிக்கையை சடுதியாக அதிகரிக்கச் செய்தார். 30 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 6 பவுன்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து களம்புகுந்த நிக்கொலஸ் பூரன் சின்னசுவாமி மைதானத்தில் வாணவேடிக்கை நிகழ்த்தினார். வெறுமனே 15 பந்துகளில் அரைச்சதத்தை பூர்த்தி செய்து இந்த ஐ.பி.எல். தொடரின் வேகமான அரைச்சதத்தை பதிவு செய்தார். 7 சிக்ஸர்கள், 4 பவுன்டரிகளுடன் 19 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். படோனியும் தன் பங்குக்கு 30 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க கடைசி ஓவரில் வெற்றிக்கு 5 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் 1 விக்கெட்டால் வெற்றியைப் பெற்றது லக்னோ அணி. பந்து வீச்சில் பார்னல், சிராஜ் தலா 3 விக்கெட்டுக்களையும் பட்டேல் 2 விக்கெட்டுக்களையும் கரன் சர்மா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஓ.ரி)

"ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ"

# மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 11 . 1934

மறைவு 08 . 04 . 2023

## முருகேசு அப்புத்துரை

மாகியப்பிட்டிச் சந்தி, மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அப்புத்துரை கடந்த (08.04.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - இராசம்மா தம்பதிகளின் மகனும், செல்லத்துரை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகராசா, சிவபாக்கியம், பொன்னையா, செல்லம்மா மற்றும் இராசமலர் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கனகராசா, திருச்செல்வம், செல்வபாக்கியம் மற்றும் பகவதி, தனலட்சுமி, தங்கராசா, கனகமணி ஆகியோரின் மைத்துனரும், சாந்தி (நோர்வே), கோமதி (ஜேர்மனி), மாலதி (ஜேர்மனி), கலைமதி (லண்டன்), ரேவதி, ஹரிகரன் (லண்டன்), ஜேந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவீந்திரன், சீவரட்ணம், ராதாகிருஷ்ணன், தர்மகுமார், ரசிந்தா, காண்டீபன், ஆகியோரின் மாமனாரும், ரகுஜன், அட்ஷயன், அபிஷேகா, அருளாளன், அபிநயன், அருணன், சௌமியா, சொனியா, அபினகா, அபியன், அம்சிகா, ஹாரிகா, அனோஜிகா, அக்ஷிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2023) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டிச் சந்தி,
மாகியப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

021 224 1103 , 076 679 6694, 077 367 0504

## சதுரங்க சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 11

அராலி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் 83ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு சதுரங்க சுற்றுப்போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற வுள்ளது. போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் அனைவரும் முன்பதிவு செய்யவேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-14,7)

## சாதனையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கர்நாடக சங்கீத பரதநாட்டிய போட்டிகளில் மூன்று முதலிடங்களையும் இரண்டு இரண்டாமிடங்களையும் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ச-159)

## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 11

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானத்தில் கலைமாணிப் பட்டம், இளைஞர் மற்றும் சமூக அபிவிருத்தியில் கலைமாணிப்பட்டம் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஏதாவது ஒரு துறையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் அடிப்படைக் கற்கைநெறி சான்றிதழைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம். எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 2223374 என்ற தொலைபேசியூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என்று யாழ்ப்பாணம் பிராந்திய நிலையத்தின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-14)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அந்த முடிவால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். பாதிப்பு எதுவும் இருக்காது.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம்கிடைக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உடல்ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கடகம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்த்துவிடுவது அவசியம். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை சிந்தித்து ஈடுபடவும். பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனக்கசப்புகள் நீங்கும். சுபச் செலவு ஏற்படும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத் செலவுகளும் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படும். பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவு எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தொடங்கவும். பெரியவர்களின் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## யாதும் ஊரே: யாவரும் கேளிர்

'உயிர்த்த ஞாயிறு' தினத்தன்று மாலை வேளையில் உதயன் அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்த மதக்குழுவொன்று, ஊடகத்தின் குரல்வளையை நசுக்கி 'கொன்று புதைக்க' எத்தனித்திருக்கின்றது. எந்த மதச் சக்திகளுக்கும் அப்பாற்பட்ட தமிழ்த் தேசியத்தை தன் கொள்கையாக வரித்துக்கொண்ட உதயன் மீதான இந்த அச்சுறுத்தல், தமிழர் தாயகத்தில் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆதலால், இது தொடர்பான பின்னணியை, இது விடயத்தில் தனது நிலைப்பாட்டை பட்டவர்த்தனமாக்க வேண்டிய தவிர்க்க முடியாத்தனம் உதயனுக்கு இருக்கவே செய்கின்றது.

கடந்த மூன்று தசாப்தத்துக்கும் மேலாக, தமிழ்த் தேசிய ஊடகப்பரப்பில் தனக்கென தனியான தடத்தைப் பதித்து வலம் வரும் உதயன் மதங்களுக்கும் – இனங்களுக்கும் அப்பாற்பட்டவன். மத அச்சுறுத்தல்களை – இன அச்சுறுத்தல்களை எதிர்த்து உதயன் குரல்கொடுத்திருக்கின்றானே அன்றி அந்தக் குரல் ஒரு குறிப்பிட்ட மதத்துக்கு உரித்தானதாகவோ அல்லது ஓர் இனக்குழுவை மையப்படுத்தியதாகவோ இதுவரை இருந்ததும் இல்லை, இனியும் இருக்கப்போவதில்லை. இதை, இந்த ஆசிரியர் தலையங்கத்தின் ஆரம்பத்திலேயே உதயன் ஆணித்தரமாக வலியுறுத்துகின்றான். அத்துடன், உதயன் மீதான மதக்குழுவின் அராஜகத்துக்குக் காரணம், ஒரு பெண்ணுக்கு அந்த மதக்குழுவின் போதகர் தலைமையிலான கும்பல் செய்த சித்திரவதையை – கொலைமுயற்சியை கழுத்தை நெரித்த சம்பவத்தை உதயன் வெளிப்படுத்தியதுதான் இத்தனைக்கும் காரணம் என்பதை அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும்.

தமிழர் தாயகம் அண்மைக்காலமாகவே 'மதப் பதற்றம்' மலிந்த பூமியாக மாற்றம்பெற்று வருகின்றது. இதை அப்பட்டமாகவே அவதானிக்க முடிகின்றது. மதவாதத்தை தீவிரமான ஆயுதம் என்பார்கள். அது மனிதத்தை மறைத்து எம் அகக்கண்ணை குருடாக்கிவிடும் பேரழிவுக் கருவி. ஆக, ஒரு நெறிமுறை 'மதம்' என்ற நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு அது 'மதவாதம்' ஆகின்றபோதுதான் அங்கே சண்டைகளும் சச்சரவுகளும் – பதற்றங்களும் – போர்களும் தோன்றுகின்றன. இன்று உலகில் இடம்பெற்றுவரும் போர்களில் 70 விழுக்காட்டுக்கும் அதிகமானவை மதவாதத்தை மையப்படுத்தியவை என்கின்றது ஐக்கிய நாடுகள் சபை. எனவே இதன் தீவிரத்தை உணர்ந்து 'கத்திமுனையில்' நடப்பதைப்போன்று விடயத்தைக் கையாள வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் இருக்கவே செய்கின்றது. சிங்களப்பேரினவாதமும் எமக்கிடையே மதப்பிளவை உண்டுபண்ண தலையால் மண் கிண்டிக்கொண்டிருக்கிறது.


உலகில் எல்லா மதங்களும் அன்பையும், ஜீவகாருண்யத்தையும், பகிர்வையும்தான் போதிக்கின்றன. சிந்தனைப் பிறழ்வான அர்த்தப்படுத்தல்கள்தான் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன. உயிர்த்தஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியாக அறியப்படும் சஹ்ரான் கும்பலின் வெறியாட்டம், ஒட்டுமொத்த இஸ்லாம் மதத்தின் மீதும் அழிக்கமுடியாத கறையாகிப் போனது. இத்தனைக்கும் பெரும்பாலான இஸ்லாமியர்கள் சஹ்ரான் கும்பலின் செயலைத் துளியளவும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதேபோன்று இப்போது உதயனுக்குள் வந்த போதகர் தலைமையிலான பாதகர் கும்பலின் செயல்கள் கிறிஸ்தவ மதத்துக்கு கறையை ஏற்படுத்த முன்னர், அதைத்தடுக்க வேண்டியது கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றும், இயேசுவை ஜீவிக்கும் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

ஒரு மக்கள் கூட்டம் கட்டுக்கடங்காமல் ஆக்ரோசப்படும்போது அதைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டியதுதான் மதத்தலைவர்களின் பிரதான கடமை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்கள் வெடிக்காதிருந்தமைக்கு, கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அந்த நேரத்தில் வழங்கிய தலைமைத்துவம்தான் பிரதான காரணம். இதற்காக அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆனால், உதயனுக்கு எதிராக மதக்குழு அடாவடித்தனம் புரிந்தபோதும் அக்கிரமங்களில் ஈடுபட்டபோதும் அவர்களைத் தூண்டிவிட்டவராக – பின்னணியில் செயற்பட்டவராக அவர்களுடன் வந்த போதகரே காணப்பட்டார். எமது சமூகத்தில் களையெடுக்கப்பட வேண்டியது இத்தகைய பிறழ்வான தலைமைகளையே அன்றி மாறாக மதங்களையல்ல. எனவே, இந்த விடயத்தை வைத்து மதப்பதற்றமொன்று ஏற்பட இடம்கொடாத வகையில் எமது கடமைகளை ஆற்றவேண்டிய கட்டாயத்தில் நாமிருக்கின்றோம் என்ற புரிதலை நாம் எல்லோரும் அவசியம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். யாதும் ஊரே: யாவரும் கேளிர்.

### நாளொரு நல்வார்த்தை

"ஒருவனுடைய மனம் தூய்மையாக இல்லாவிட்டால் பணமோ, வலிமையோ, அழகோ அவனுக்குப் பயன்படாது"

– அரிஸ்ரோட்டில்




காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை

# மக்கள் முன்னிலையில் தூக்கிலிட வேண்டுமாம்?

கோத்தாபயவின் தீவிர விசுவாசியான ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 11**

**உயிர்த்தஞாயிறு தினத் தாக்குதல் குற்றவாளிகளையும், காலிமுகத்திடல் போராட்டக்காரர்களையும் மக்கள் முன்னிலையில் தூக்கிலிட வேண்டும். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கு இந்த இரண்டு தீவிரவாதத் தரப்பினர்களே பிரதான காரணகர்த்தாக்கள் - இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையில் 2019ஆம் ஆண்டு உயிர்த்தஞாயிறு தினமன்று நடத்தப்பட்ட தாக்குதலின் குற்றவாளிகளுக்கு இன்னமும் உரிய தண்டனை வழங்கப்படவில்லை. அந்தத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட சகல குற்றவாளிகளையும் தூக்கிலிடவேண்டும்.

அதேவேளை, ராஜபக்ச அரசுக்கு எதிராகப் போராடிய காலிமுகத்திடல் போராட்டக்காரர்களையும் மக்கள் முன்னிலையில் தூக்கிலிட வேண்டும். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கு இந்த இரண்டு தீவிரவாதத் தரப்பினர்களே பிரதான காரணகர்த்தாக்கள்' - என்றார். (ம-22)

# ராஜபக்சக்களுடைய பணத்தை உடனடியாக மீட்டு வாருங்கள்!

நாமல் ராஜபக்ச எள்ளல்

கொழும்பு, ஏப். 11

ராஜபக்சக்களின் பணம் உகண்டாவில் பதுக்கப்பட்டிருந்தால் அவற்றை நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாமல் ராஜபக்ச 18 டொலர் மில்லியனை தோளில் சுமந்துசெல்வதை கண்டதாக அன்று கூறினர். ராஜபக்சக்களின் பணம் விமானம்மூலம் உகண்டாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது எனவும் கூறப்பட்டது. அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டிருந்தால், இது விடயத்தில் அரசு தலையிட்டு அந்த பணத்தை அதே விமானத்தில் நாட்டுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன். கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியை வீழ்த்துவதற்கு சோடிக்கப்பட்ட பொய்களில் இதுவும் ஒன்றாகும்" - என்றார்.

(ம-44)

நாள்

12.04.2023


புதன்கிழமை

பங்குனி 29

சுபநேரம் : 04.36 - 06.06

ராகுகாலம் : 12.06 - 01.36


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளி மாணவர்களின் சிறுவர் சந்தை கடந்த 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முன்பள்ளி முன்றிலில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் வட்டுக்கோட்டை தொகுதித் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவனும் கலந்துகொண்டார். (ச-125)



அனலைதீவுஅருணோதயா முன்பள்ளியில் விளையாட்டுப் போட்டிகளுக்குரிய பரிசில் வழங்கலும் பாடசாலைகளில் தரம் ஒன்றிற்கு இணையவுள்ள மாணவர்களின் பிரிவுபசார விழாவும் முன்பள்ளி மண்டபத்தில் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது. (ய-9)



யோகர் சுவாமியின் 59 ஆவது குருபூசை தின நிகழ்வு கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை கொழும்புத்துறையிலுள்ள அவரது சமாதி கோயிலில் இடம்பெற்றது. நிகழ்வில் தமிழ்நாடு கும்பகோணத்தைச் சேர்ந்த செந்தமிழ் ஆகம அந்தணர் இறைநெறி இமையவன் 'சமய வாழ்வியல்' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். (ச-66)



இணுவில் பொதுநூலகத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு குருதிக்கொடை முகாம் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை நூலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது பொதுநூலக அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டு குருதிக்கொடையளித்தனர். (ய-66)



சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு விசேட கருத்தரங்கு சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தில் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை நடத்தப்பட்டது. ஒன்றியத் தலைவர் இரா.தர்ஷன் தலைமையில் நடைபெற்ற கருத்தமர்வில் மாணவர்களை பரீட்சைக்குத் தயார்ப்படுத்தல் குறித்து விழிப்புணர்வு கருத்துரைகள் வழங்கப்பட்டன. (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி சிறுப்பிட்டி அண்ணமாமகேஸ்வரர் ஆலய கலாசார மண்டபத்தில் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியின் இறுதியில் மாணவர்கள் அனைவருக்கும் சூழல் விழிப்புணர்வு மேற்கோள்கள் மற்றும் புகைப்படங்கள் அடங்கிய அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. (ய)

**மாடி வீடு வாடகைக்கு உண்டு**

ஊரெழு மேற்கு, புன்னாலைக்கட்டுவன்
Sudents,Staff Or Company
வரவேற்கத்தக்கது.
077 482 0558
(CS 24408)(J-1)


## டெங்கைக் கட்டுப்படுத்த
# கிருமிநீக்கிய நுளம்புகள் சுற்றாடலில் விடுவிப்பு!

டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் வகையில் சுமார் 10 லட்சம் ஆண் நுளம்புகளை கிருமிநீக்கம் செய்து சுற்றாடலில் விடும் திட்டத்தை களனிப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கவுள்ளது.

இதுதொடர்பில் களனிப் பல்கலைக்கழகத்தின் இரண்டாம் நிலை மருத்துவ விஞ்ஞானப் பிரிவின் பேராசிரியர் ஒருவர் தெரிவித்ததாவது:

அடுத்த மாதத்தில் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக சுகாதார அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்யவுள்ளது.

இந்த 10 லட்சம் நுளம்புகளை வெளிவிடுவதற்கு கம்பஹா பிரதேசத்தில் 300 ஹெக்ரேயர் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. முன்னதாக நடைமுறைப்படுத்தப்பட்ட முன்னோடித் திட்டம் வெற்றியடைந்துள்ளது. இந்தத் திட்டத்தினூடாக மாகாணத்தில் டெங்கு நுளம்புகள் பரவவில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)


**துயர் பகிர்கின்றோம்**



வலிகாம கல்வி வலய யா/சுழிபுரம் வடக்கு
ஆறுமுக வித்தியாலய இசை ஆசிரியர்
**கந்தசாமி கருநேசன்**
அவர்கள் இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!
**இசை ஆசிரியர்கள்**
**வலிகாமம் கல்வி வலயம்.**
(CR 39629)A-1

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

மூன்று வயதுடைய குழந்தையைப் பராமரிக்க வீட்டுப் பணிப்பெண் தேவை. தங்குமிட வசதி உண்டு.
**இடம் - தருமபுரம் (கிளிநொச்சி மாவட்டம்) சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**
**077 883 5828**
(CS/24356) AH-1

**மரண அறிவித்தல்**

**கனகலிங்கம் இந்திரலிங்கம்**



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் உருக்குமணிஅம்மா- குமாரசாமி அன்னலட்சுமி தம்பதிகளின் பேரனும் கனகலிங்கம் இந்திரலிங்கம் அவர்கள் கடந்த (02.04.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கனகலிங்கம் இந்திராதேவி தம்பதிகளின் அன்பு மகனும், திரு.திருமதி ஆறுமுகம் மகாலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி தங்கராணியின் (ராணி - Rani Fashan - Tootin) பாசமிகு கணவரும், ராகவனின் பாசமிகு தந்தையும், தியாகலிங்கம் (லண்டன்), சிவாஜிலிங்கம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் - இலங்கை), வசந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு அண்ணாவும், திருமதி ஆறுமுகம் சுந்தரலட்சுமி தம்பதிகளின் மருமகனும், திருமதிகள் கலாவதி தியாகலிங்கம், மலர்விழி சிவாஜிலிங்கம், பா. ரவீந்திரன், நகுலேஸ்வரன் (நகுலன் - இலங்கை), தேவராணி ( தேவி - இலங்கை), மகாதேவி ( Caaveiry silks - Mitcham), ஆனந்தநாயகி (ஆனந்தி - லண்டன்), காலஞ்சென்ற பத்மாவதி (லெப்டினன்ட் கேணல் நளாயினி), தனராஜன் (ராசன் - கனடா), நவீந்திரன் (நவி - லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், ம.சங்கரகாந்திலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), திருமதி சோ.ராதாராணி ஆகியோரின் பெறாமகனும், கு. பாலச்சந்திரனின் மருமகனும், காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன், ஜவகர்லால்நேரு, மோதிலால்நேரு (ஜனாதிபதி சட்டத்தரணி), செல்வச்சந்திரன், நந்தலால்நேரு ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான திருமதி ஞா. கமலாதேவி, ப. சரோஜினிதேவி, அ.சொரூபராணி ஆகியோரின் பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (12.04.2023) புதன்கிழமை நண்பகல் 12 மணியிலிருந்து Tooting & Mitcham Community sports club, Imperial fileds, Bishopford, Modern, surrey, sm4 6Bf இல் நடைபெற்று, தகனக்கிரியைகள் பிற்பகல் 3.45 மணியளவில் Croydon Cermatorium,East Chapel, Mitcham Road, Croydon, Cr9 3AT இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு : ராணி (மனைவி) - 0044 7507549004, ராகவன் (மகன்) - 00447 4325 99679, தியாகலிங்கம் (தம்பி) - 0044 79600 33680, சிவாஜிலிங்கம் (தம்பி) - 00947777 29020, வசந்தினி (தங்கை)- 0014163995256, லவன் (சகலன்) - 00447 917825009**
(CS/23838)AH-1


# 5 நாள்களில் 25 பேர் விபத்தில் சிக்கி சாவு!

நாட்டில் கடந்த 5 நாள்களில் இடம்பெற்ற விபத்துகளில் சிக்கி 25 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தில் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகின்றது. கடந்த 5 நாள்களில் 270 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த விபத்துகளில் 25 பேர் உயிரிழந்துள்ளனர். (ச-இ)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

**மரண அறிவித்தல்**

**பொன்னுத்துரை கனகம்மா**



தோற்றம் 10.08.1936 — மறைவு 09.04.2023

மல்லாகம் மில் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் ஆசாரி ஒழுங்கை தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கனகம்மா நேற்றுமுன்தினம் (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தெய்வானை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற கந்தையா சின்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் பாசமிகு மனைவியும், குகராஜா, குகனேஸ்வரி (சுவிஸ்), கைலாயநாதன் (சின்னத்தம்பி), சறோஜினிதேவி, புனிதவதி, பத்மநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற கேதீஸ்வரன் (சுவிஸ்) மற்றும் பிறேமாவதி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற துரைசிங்கம் (சுவிஸ்) மற்றும் சத்தியநாதன், மனோகரன், முரளிதரன், கலாநிதி, சுகந்தினி, அங்கயக்கண்ணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற கந்தசாமி, வேலுப்பிள்ளை மற்றும் சின்னத்துரை, கனகலிங்கம், மகேஸ்வரி, பகவதி ஆகியோரின் சகோதரியும், கவிதா (சுவிஸ்), விஜிதா (பிரான்ஸ்), துளசி (சுவிஸ்), குருபரன் (சுவிஸ்), ஜாமினி, ஜெயந்தினி, சசிகாந் (பிரான்ஸ்), மாலதி (கனடா), லோஸ்னி, கஜகர்னி (பிரான்ஸ்), கோபிநாத் (பிரான்ஸ்), கஜகரி, சஞ்சீவினி (பிரான்ஸ்), கோபிதன் (பிரான்ஸ்), றதீக்கா (பிரான்ஸ்), குருனேகன், கௌரீசன், சுலக்ஷன் (ஜேர்மனி), டிருக்ஷன் (ஜேர்மனி), சரண்யன் (சுவிஸ்), பானுஜன் (சுவிஸ்), அஞ்சனன் (சுவிஸ்), அக்ஸயன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2023) புதன்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப.12.30 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 419 2184**
(CS24407)(J-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் உடையும்!

## அந்தக் கட்சியின் எம்.பி. நளின்பண்டார தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 11**

**4 துவருடத்தின் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்துடன் இணைவது உறுதி என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: கட்சித்தாவல் இடம்பெறவுள் ளதை எங்களால் மறுக்கமுடி யாது. ஐக்கிய மக்கள் சக்தியின் சில நாடாளுமன்ற உறுப்பினர் கள் அரசாங்கத்தின் பக்கம் செல் வார்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண எப்போதும் கட்சி தாவும் நோக்கத்துடனேயே உள் ளார். அமைச்சுப் பொறுப்பை ஏற் பது குறித்தும் ஆர்வமாக உள்ளார். ராஜித எப்போதும் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் காணப்படுகின்றார். அத்துடன் கட்சி தாவுவது அவருக்குப் பெரிய விடயமல்ல - என்றார். (ம)

# ஐ.ம.சக்திக்குள் குழப்பம்: ஒழுக்காற்று நடவடிக்கை!

## மரிக்கார் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஏப். 11

கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவோருக்கு எதி ராக ஒழுக்காற்று நடவடிக்கையை கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எடுக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலர் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவவுள்ள னர் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை தேவை.

எமது கட்சியிலிருந்து அரசு பக்கம் செல் பவர்கள் தாராளமாகச் செல்லலாம். நாம் நிச்சயம் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைப்போம்- என்றார். (ச-இ)


# 5 ஆண்டுகள் விடுமுறையில் 2 ஆயிரம் பணியாளர்கள்!

அரச ஊழியர்களுக்கான சம்பளமின்றிய ஐந்தாண்டு விடுமுறைக்காக சமர்ப்பிக் கப்பட்ட 30 ஆயிரம் விண்ணப்பங்களில் 2 ஆயிரம் விண்ணப்பங்கள் மட்டுமே அங்கீகரிக்கப் பட்டுள்ளன என பொதுநிர்வாக, உள்நாட்டலுவல் கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரி வித்துள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதம் அரச ஊழி யர்கள் ஊதிய மின்றி 5 வருட காலத்துக்கு வெளிநாடு செல் வதற்கான சுற்ற றிக்கை வெளியி டப்பட்டது. இந்த நிலையிலேயே 2 ஆயிரம் விண் ணப்பங்களுக்கு இதுவரை அனு மதி வழங்கப் பட்டுள்ளது என உள்ளூராட்சி அமைச்சு தெரி வித்துள்ளது. (ச)


## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 . 11 . 1935



மறைவு 22 . 03 . 2014

### அமரர் தம்பு நடேசு

(Retired Senior Tax Officer, Department Of Inland Revenue)

திதி:- அபரபக்க சஷ்டி (11.04.2023)

ஆண்டு விஜய ஆய பங்குனி எட்டு சனிக்கிழமை
பூண்ட அனுசம் அபர பக்க சஷ்டித் திதியதனில் -
கூடுவிட்டு
நீண்ட புகழ் நிலவும் தம்பு நடேசவனும்
நாடினான் நடேசன் தாள்

என்றும் உங்கள் நினைவுகளுடன்,

381, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (CS 24405)AH-1 குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### கந்சாமி கருநேசன்

(சங்கீத ஆசிரியர் - ஆறுமுக வித்தியாலயம், சுழிபுரம்)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் தற்போது சுழிபுரம் கிழக்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கருநேசன் அவர்கள் நேற்று (10.04.2023) திங்கட் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.கந்தசாமி (சுட்டி செல்லத் துரை) தம்பதியரின் மகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2023) செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச.பார்த்திபன். (CS 24411)A-1



## மரண அறிவித்தல்



தோற்றம் 18.03.1938 மறைவு 10.04.2023

### ரதிலீலாவதி தியாகராசா

சாவகச்சேரி விநாசித்தம்பி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாக வும் கொண்ட ரதிலீலாவதி தியாகராசா அவர்கள் நேற்று (10.04. 2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்கண்டு பஞ்சாட்சரம், ஆறுமுகம் பாலரத்தினம் தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற வல்லிபுரம் தியாகராசா (ஓய்வுபெற்ற அதிபர், நாவற்குழி) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற அன்பகிலன் அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2023) செவ்வாய்க் கிழமை காலை 09.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரை யும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விநாசித்தம்பி வீதி, சாவகச்சேரி.

தகவல்: சிவகுமாரி (பேறாமகள்) (CS 24410) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு

## Eng. D.K.P.U. குணதிலக

**பிரதிப் பொது முகாமையாளர்**
**(வட மாகாணம்), DD 01- CEB**




வளமான வாழ்விற்காக வடக்கின் இருளகற்ற
தடையற்ற மின்சாரம் தரச் செய்த வல்லவர்
வடமாகாண மின்சார சபைக்காக
நிலையான கட்டிடங்கள் தந்தவர்
ஊழியர்கள் உளமுணர்ந்து இன மத பேதமின்றி
வேகமும் விவேகமும் வித்துவமும் கொண்டு
ஈராறு ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிய பணிகள் யாவும்
தூண்டிய விளக்கைப்போல சுடரொளி பரப்பி நிற்கும்
தோண்டிய ஊற்றின் நீராய் உங்கள் கீர்த்தி
எஞ்ஞான்றும் எம்மைப் பேச வைக்கும்!
ஓய்வென்னும் பருவத்தில் உற்ற துணையுடன் சேர்ந்து
இன்னும் நூறு ஆண்டுகள் நீடு வாழ
தூயநல்லிறைவன் தொடரருள் புரிந்திட
மண்ணில் மகிழ்வுடன் வாழ்க! வாழ்கவென
உங்களில் சிறியவர் நாங்கள் - எனினும்
மாறா அன்புடன் வாழ்த்துகிறோம்.

இலங்கை மின்சார சபையின் பல கிளைகளில் பல பதவிகள் வகித்து வட மாகாண பிரதிப் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய மதிப்பிற்குரிய Eng. D.K.P.U. குணதிலக நாளை (12.04.2023) தனது **60** ஆவது வயதில் ஓய்வு பெறுகின்றார். வட மாகாண மின்சார விநியோகம் மற்றும் அபிவிருத்திக்கு அவர் ஆற்றிய பங்களிப்பினையும், நீண்டகால சேவையினையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.















**“பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலின் பெரிது.”**

**“If we weigh the excellence of a benefit which is conferred without weighing the return, it is larger than the sea”** குறள் - 103

**வாழ்த்துவோர் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்.**
**இலங்கை மின்சார சபை, வட மாகாணம்.**

**11.04.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத...

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான தூதுவர் டெனில் சைபி இந்த விமர்சனத்தை வெளியிட்டுள்ளார்.
ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைகளை வழங்கவேண்டுமா? இல்லையா? என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் எடுக்கவேண்டிய முடிவுக்கு முன்னதாகவே இந்த புதிய மாற்றுச்சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.
இந்தப் புதிய சட்டத்தை ஏற்காது வரிச் சலுகை ஏற்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் நீடிக்கத் தவறினால், இலங்கைக்கு 500 மில்லியன் டொலர் மதிப்பிலான வர்த்தகச் சலுகை கிடைக்காமல் போகக்கூடும். ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத அமைப்புக்களை அடையாளப்படுத்தும்போது நீதித்துறை மற்றும் பொது மக்களது தகவல்களின் அடிப்படையிலான செயல்முறையால் முன்னெடுக்கப்படுகிறது. எனினும் இலங்கையில், இந்தச் செயல்முறை மிகவும் குறைவான வெளிப்படைத் தன்மையை கொண்டுள்ளது - என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ.இ)

## குடும்பத்தகராறு...

ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
சத்தியா (வயது - 34) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அத்துடன் இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 5 பேர் மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நீண்டகாலமாக சாந்திபுரத்தில் இரு குடும்பங்களுக்கிடையில் நிலவி வந்த பிரச்சினை பொலிஸ் நிலையம் வரை சென்று சமரசம் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு குடும்பத்தினிடையே மீண்டும் பிரச்சினை இடம்பெற்று, முரண்பாடு முற்றியுள்ளது. இந்நிலையில் பலர் இணைந்து கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்திய நிலையில் சத்தியா என்பவர் உயிரிழந்துள்ளார்.
கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேநபர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்களைத் தேடிவருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ஓ.56)

## திணைக்கள...

தெரிவிக்கப்படுகின்றது. முன்பள்ளியை நடத்துவதற்குரிய அனுமதியை வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் மேற்படி போதகர் பெற்றுக்கொள்ளவில்லை என்று திணைக்கள அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.
மேற்படி முன்பள்ளி சில ஆண்டுகளுக்கு முன்னர் இயங்கியதாகவும் முறையான அனுமதியைப்பெற்று செயற்படுத்துமாறு அதிகாரிகள் பணித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னர் மாணவர்கள் இன்மையால் சில ஆண்டுகள் இயங்காமல் இருந்த மேற்படி முன்பள்ளி மீண்டும் சில வாரங்களுக்கு முன்னர் இயங்க ஆரம்பித்துள்ளது.
மாணவர்கள் பெரியளவில் முன்பள்ளியில் சேராததையடுத்து பொருள்களை இலவசமாகவழங்கியும், பணம்வழங்கியும் இணைக்க முயல்வதாக பிரதேச மக்கள் குற்றம்சுமத்துகின்றனர். இது மதமாற்ற முயற்சியாக இருக்கும் என்று அவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.
இந்த முன்பள்ளியின் பின்புலத்தில் வடக்கு மாகாணசபையிலுள்ள மாவட்டச் செயலர் உடந்தையாக இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (அ-ஓ.5)

## வெப்பகாலத்தில்...

பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார். கிளிநொச்சியிலுள்ள தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அமெரிக்காவைச் சேர்ந்த 'வெண் ஈ' தாக்கமானது கடந்த வருடம் இந்தியாவில் பரவ ஆரம்பித்திருந்தது. எமது நாட்டின் தென்னை முக்கோண வலயத்திலும் பரவ ஆரம்பித்திருந்த நிலையில் தற்போது வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளிலும் அது அவதானிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.
கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் இதன் தாக்கம் இனிவரும் நாள்களில் அதிகமாக இருக்கக்கூடும். வெப்பமான காலநிலை நிலவுவதால் வேகமாகப் பரவக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. எனவே தென்னைச் செய்கையாளர்கள் தங்களுடைய தென்னைத் தோட்டங்களில் இவற்றின் தாக்கம் காணப்பட்டால் உடனடியாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.
இவற்றின் தாக்கம் தென்னை மாத்திரம் இன்றி கமுகு, தேக்கு, பப்பாசி போன்றவற்றையும் தாக்கக்கூடியது. வெண் ஈயின் தாக்கம் காணப்பட்டால் உடனடியாக கள உத்தியோகத்தர்களின் கவனத்துக்குக் கொண்டு சென்று கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (அ-ஓ.இ)

## சாட்சியங்களை...

பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். வங்கிப் பணியாளரான பெண்ணின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த போதகர் தலைமையிலான குழு, அங்கு அட்டகாசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஈடுபட்டது. பெண்ணின் கழுத்தையும் நெரித்திருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் போதகர் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பான செய்தி உதயன் பத்திரிகையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியாகியிருந்தது.
இதனையடுத்து போதகர் தலைமையிலான குழு உதயன் பணிமனைக்குள் அத்துமீறி நுழைந்து அட்டகாசத்தில் ஈடுபட்டது. இதன்போது அந்தக் குழுவினரும் போதகரும், மேற்படி செய்தியை யார் வழங்கினார்கள் என்றே தொடர்ச்சியாகக்கேட்டனர். செய்தியை வழங்கியது யார் என்பதை அறிவதே அவர்களது பிரதான நோக்கமாக இருந்தது.
ஏற்கனவே சில ஊடகவியலாளர்களை அச்சுறுத்தியதாலேயே வேறெந்த ஊடகத்திலும் இந்தச் செய்தி வெளிவரவில்லை என்றும் கூறப்படுகின்றது.
பெண்ணின் கழுத்தை நெரித்தமை தொடர்பான வழக்கு தொடர்பாக தகவல்கள் வழங்கியவர்களைக் கண்டறிந்து அச்சுறுத்துவதன் ஊடாக சாட்சியங்களுக்கு மறைமுக அல்லது நேரடி அழுத்தம் பிரயோகிக்க முயன்றார்களா என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ஓ.5)

## நெசவுசாலையிலிருந்து...

கோரி இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை அச்சுவேலி நெசவுசாலைக்கு முன்பாக அடையாள உணவுதவிர்ப்புப் போராட்டமொன்று நடைபெறவுள்ளதாக இலங்கை சிவசேனை அமைப்பு அறிவித்துள்ளது. அடையாள உணவுதவிர்ப்புப் போராட்ட நிகழ்வில் அனைத்துச் சைவமக்களும் கலந்து கொண்டு போராட்டத்துக்கு வலுச் சேர்க்குமாறும் இலங்கை சிவசேனை அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-ஓ.66)

## பாதகம்...

அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட 6 பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.
அச்சுவேலியிலுள்ள 'அசெம்பிளி. ஓஃவ் ஜீவவார்த்தை' என்ற மத சபையின் போதகர் சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட குழு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள உதயன் பத்திரிகை தலைமையகத்துக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்டது.
இந்த மதச்சபையின் போதகர் உட்பட மூவர் கடந்த வெள்ளிக்கிழமை வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்களைத் தாக்கி அச்சுறுத்தியமை தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.
அது தொடர்பான செய்தியை வெளியிட்டமைக்காகவே போதகர் தலைமையிலான குழுவினர் உதயன் தலைமையகத்துக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்டனர்.
இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.
இந்த நிலையில் போதகர் உள்ளிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 6 பேர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று திங்கட்கிழமை முற்படுத்தப்பட்டபோது, அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையோரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. ஏனையோரும் கைது செய்யப்பட்டு விரைவில் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஓ.இ)

## இந்தியத்...

செய்வார் எனஎதிர்பார்ப்பதாகவும் வெடுக்குநாறி ஆலயநிர்வாகஉறுப்பினர் தெரிவித்தார்.
கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தில் வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர் உட்பட வவுனியாவை சேர்ந்த இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள் கொழும்பு இந்துமாமன்றம் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழு இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயை சந்தித்தனர்.
சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் சேதமாக்கப்பட்டமை மீண்டும் விக்கிரகங்கள் வைப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் ஏற்படுத்தும் தடைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.
எல்லையோரக் கிராமங்களில் நடைபெறும் ஆக்கிரமிப்புக்களுடன் சைவ அடையாளங்கள் அழிக்கப்படுகின்றமை தொடர்பாகவும் இதன்போது இந்தியத் தூதுவருக்கு ஆவணங்கள் ஊடாக தெளிவுறுத்தப்பட்டுள்ளது.
இந்நிலையில், தம்மாலான செயற்பாடுகளை மேற்கொள்ள தாம் முனைப்பு காட்டுவோம் என இந்தியத் தூதுவர் குறித்த குழுவிடம் தெரிவித்ததாக வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.
இதேவேளை, இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து பௌத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுடனும் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. நீதிமன்றில் வழக்கு இருப்பதால் உடனடியாக இதில் தலையிடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார் என ஆலய நிர்வாகத்தினர் குறிப்பிட்டனர். (அ-ஓ.110)

## பல்கலைக்கழக...

பல்கலைக்கழக மாணவர்களை உளவளத்துணை சிகிச்சைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு.ரவிராஜன் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் - கந்தர்மடம், பழம் றோட்டுப் பகுதியிலுள்ள தனியார் மாணவர் விடுதியில் தங்கியிருந்த சமயம், பொலிஸார் நேற்று முன்தினம் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது, தடைசெய்யப்பட்ட உயிர்கொல்லி போதை மாத்திரைகளை உட்கொண்டமை மற்றும் போதை மாத்திரை வெற்று உறைகள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டுப் பின்னர் பல்கலைக்கழக அதிகாரிகள் முன்னிலையில் விடுவிக்கப்பட்ட மாணவர்களில், உயிர்கொல்லி போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சில மாணவர்களை உளவளத்துணைச் சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.
மேலும் 'இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பல்கலைக்கழக ஒழுக்காற்று உத்தியோகத்தர்களின் பரிந்துரையின் அடிப்படையில், போதைக்கு அடிமையாகி இருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்படும் மாணவர்களைத் தேவையான உளவளத்துணைச் சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்த மாணவர்களின் பெற்றோரும் நேரடியாக அழைக்கப்பட்டு விளக்கமளிக்கப்படவுள்ளது என்றும், சம்பவம் தொடர்பில் பொலிஸார் எடுக்கும் எந்தச் சட்ட நடவடிக்கைகளிலும் பல்கலைக்கழகம் குறுக்கிடாது' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
விசாரணைக்குட்படுத்தப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் நடைபெறுவதால், நேற்றுமுன்தினமே விடுவிக்கப்பட்டிருந்தனர். எனினும், மாணவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தேவையான புனர்வாழ்வு நடவடிக்கைகளைப் பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொள்ளவேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.
இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று நண்பகல் பரீட்சை முடிவடைந்த பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.
அவர்களில் இருவரின் சிறுநீர் மாதிரிகளில் ஒருவர் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளைப் பயன்படுத்தியமையும் மற்றையவர் உயிர்கொல்லி கஞ்சா பயன்படுத்தியமையும் தெரியவந்துள்ளது. (அ-ஓ.5)

## சாத பரீட்சை...

அடுத்த மாதம் 15ஆம் திகதி, 2022ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் பரீட்சையை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பரீட்சை எதிர்வரும் மே 29ஆம் திகதி ஆரம்பமாகும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-ஓ.இ)

## உள்ளூராட்சித்...

கலந்துரையாடலைத்தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர், எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படமாட்டாது. எதிர்காலத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் திறைசேரி அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் நடத்தப்படும் - என்றார். (அ-ஓ.இ)


# மரண அறிவித்தல்

## தீபமணி பாலதேவன்



கருவேலடி லேன் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த தீபமணி பாலதேவன் நேற்று (10.04.2023) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற அரியநாயகம் கிறேஸ் நேசமணியின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற தம்பிஐயா ஜெயலக்ஷ்சுமி (மங்களம்)யின் மருமகளும், காலஞ்சென்ற பாலதேவனின் மனைவியும், சத்தியபாமா, லக்ஸ்மன்திசா, லக்ஸ்சுமிகுமார் (கனடா), லக்ஸ்சுமிகுமாரி ஆகியோரின் சகோதரியும், சித்திரா (U.K), கங்கா (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி, ஆரம்பபிரிவு), அரவிந்தன் (ஊழியர் ஸ்ரீதேவி கருமாரி நகை மாடம்) ஆகியோரின் தாயாரும், வரதராஜ் (U.K), ஜெகதீஸ்வரன், வசந்தா ஆகியோரின் மாமியாரும், விபுசன் (U.K), சாதுளா (U.K), பிரியந் (U.K), மதூஷிகன், லக்சனா (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2023) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24413)1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமறைவாகிய...

யிருந்த சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் தேடப்பட்ட 80 வயதான போதகர் கொழும்பில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாக, கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

கானான் ஜெப ஆலயத்தின் கட்டுப்பாட்டிலிருந்த மாணவர் விடுதி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அனுமதியுடன் மாத்திரமே இயங்கியது. சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் அனுமதியைப் பெறாமல் சட்டவிரோதமாகச் செயற்பட்டிருந்தது. சிறுவர் இல்லச் சிறுமிகள் 3 பேர் தப்பித்துச் சென்றதையடுத்து இந்த விடயம் அம்பலமாகியிருந்தது. அங்கிருந்த சிறுமிகள் வேறு இல்லத்துக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

சிறுமிகளிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் ஆலயத்தின் தலைமைப்போதகர் தம்மிடம் தகாத முறையில் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாகத் தெரிவித்திருந்தனர். இதனையடுத்து 80 வயதான தலைமைப் போதகரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்த போதும் அவர் தலைமறைவாகியிருந்தார்.

இந்த நிலையில் கொழும்பில் நேற்றுக் கைது செய்யப்பட்ட போதகரை உடனடியாகவே அங்கு நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரது கடவுச்சீட்டை முடக்கிய மன்று பிணையில் விடுவித்தது. யாழ்ப்பாணத்திலுள்ள நீதிமன்றில் உடனடியாகச் சரணடையுமாறும் அறிவுறுத்தியுள்ளது. (அ-ஒ,5,125)

# மிருசுவிலில் மண்ணுக்குள்ளிருந்து 12 தெய்வச் சிலைகள் வெளிப்பட்டன

## கனவில் வந்தவை என்கிறார் காணியின் உரிமையாளர்

மிருசுவில், மன்னம்குறிச்சிப் பகுதியில் வீட்டு வளவில் நிலத்தை அகழ்ந்தபோது 12 சிலைகள் வெளிப்பட்டதாக வெளியான தகவலையடுத்து, அந்தப் பகுதியில் பெருமளவு மக்கள் குவிந்துள்ளனர். நேற்று இந்தச் சம்பவம் நடந்தது.

மன்னம்குறிச்சி ஆலயத்துக்கு அண்மையாகவுள்ள வீடொன்றில் இந்தச் சம்பவம் நடந்தது. தனது கனவில் வெளிப்பட்ட தகவலையடுத்து அந்த இடத்தை அகழ்ந்ததாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

சிவலிங்கம், அம்மன், நாகம் உள்ளிட்ட 12 சிலைகள் அந்த இடத்தில் வெளிப்பட்டன. அவை ஐம்பொன் சிலைகள். இந்த தகவல் அறிந்ததும், அங்கு பெருமளவான மக்கள் குவிந்து, சிலைகளை பார்வையிட்டும், வழிபட்டும் வருகிறார்கள். கொடிகாமம் பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்று சிலைகளைப் பொறுப்பேற்க முயன்றனர். எனினும், வீட்டு உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் அந்த முயற்சியை பொலிஸார் கைவிட்டுச் சென்றனர். வீட்டு உரிமையாளர் மற்றொரு தகவலையும் வெளியிட்டார்.

சுமார் 20 வருடங்களின் முன்னர் தனது வளவில் ஒரு இடத்தில் தென்னம்பிள்ளையொன்று முளைத்து வந்ததாகவும், முளைக்கும்போதே அதில் குரும்பைகள் காணப்பட்டதாகவும் தெரிவித்தார். எனினும், அந்த தென்னம்பிள்ளை குறுகிய காலத்தில் வாடி விட்டதாகவும், அந்த இடத்திலேயே சிலைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கனவில் வெளிப்பட்ட தகவலையடுத்து, சிலைகளை அகழ்ந்து, நேற்று அந்தப் பகுதியில் சிலைகளை வைத்து ஆலயம் அமைப்பதற்கான கும்பாபிஷேகம் செய்து விட்டதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார். அதனால் சிலைகளை எடுத்துச் செல்ல வேண்டாமென பொலிஸாரிடம் நேற்றுத் தெரிவித்தார்.

சிலைகள் அனைத்தும் புத்தம் புதியவை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஒ.இ)

## 'அசெம்பிளி...

அச்சுவேலி நெசவுசாலை - 1995 யாழ்ப்பாண இடம்பெயர்வுக்கு முன்வரை மிகவும் வினைத்திறனுடன் இயங்கிய உள்ளூர்க் கைத்தொழிற்சாலை. பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கைத்தறி உற்பத்திகளை விற்பனைக்காக அனுப்புகின்ற, நூல் கொள்வனவு செய்து துணிகளாக்கி வெளியீடு செய்கின்ற தொழிற்சாலையாக இருந்தது, அச்சுவேலி நெசவுசாலை. அச்சுவேலி இராஜவீதியில், அச்சுவேலி நகரிலிருந்து 400 மீற்றர் தொலைவுக்குள் 'யூனியன்' என்றழைக்கப்படுகின்ற அச்சுவேலி ப.நோ.கூ.சங்கத்தின் காணிக்கு எதிராக அமைந்திருந்தது, அச்சுவேலி நெசவுசாலை.

1996 யாழ்ப்பாண மீள்குடியேற்றத்தின் போது, அச்சுவேலி ப.நோ.கூ.சங்கக் காணியில் இராணுவம் குடிகொண்டது. அயலிலுள்ள சுமார் 20 - 25 வரையான வீடுகளையும் ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட 'அச்சுவேலி யூனியன் காம்ப்' 1996 முதல் 2010 வரை இலங்கை இராணுவத்தின் பெரிய முகாமாகக் கையகப்படுத்தப்பட்டிருந்தது.

1996 முதல் 2008 வரையான காலத்தில் 'அச்சுவேலி யூனியன் காம்ப்' காணாத அழுகுரல்களும் மரண ஓலங்களும் இல்லை! ஆம்! 'அச்சுவேலி யூனியன் காம்ப்' ஒரு வதைமுகாமாக தொழிற்பட்டிருந்தது. அயல்வீடுகளில் மக்கள் குடியிருக்கவே அச்சப்படுமளவுக்கு அந்தப்பிரதேசத்தில் இராணுவ ஆதிக்கம் தலைவிரித்தாடிய காலத்தில், 'யூனியன் காம்ப்புக்கு' முன்புறமிருக்கும் அச்சுவேலி நெசவுசாலை இயங்காமல், பழுதடைந்த உபகரணத் தொகுதிகளோடு வெறுமையாகவே இருந்தது.

அச்சுவேலி யூனியன் காம்ப்பால், போசிக்கப்பட்ட அரச ஒட்டுக்குழு துணை ஆயுதக்குழு, தமது முகாமை யூனியன் காம்ப்புக்கு அண்மையில் அமைந்திருந்தது. அடாவடியாக வாரப்பத்திரிகை ஒன்றை விற்பதும், தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்களை இராணுவப் பாதுகாப்போடு காட்டிக்கொடுப்பதும், கட்டப்பஞ்சாயத்து பார்ப்பதுமாக இந்த அடிவருடிகளின் வயிறு வளர்ந்தது.

இந்தக்கால கட்டத்தில், இந்தத் துணை இராணுவக் குழுவின் அச்சுவேலிப் பொறுப்பாளர் தனது விசுவாசியான போதகருக்கு தானம் கொடுத்த காணி மற்றும் கட்டடம், அரச காணியான அச்சுவேலி நெசவுசாலை, இராணுவத் துணைக்குழுவின் பெருந்தகை நிரந்தர அரச அமைச்சராக இருப்பதனால், அரச திணைக்கள நடவடிக்கைகள் எவற்றுக்கும் அவர்கள் அஞ்சியிருக்கவில்லை. சகலரையும் 'திரையரங்கே' பார்த்துக்கொண்டது.

போதகர் முதலில் ஆங்கில வகுப்புக்களை ஆரம்பித்தார். கொஞ்சம் கொஞ்சமாக சபைக்கான விசுவாசிகளைச் சேர்த்தார். இடையில் இவர்களது சபை இரண்டுபட்டு வெவ்வேறு குழுக்களினதும், புதிய குழுவின் பிரார்த்தனைக் கூடமாக இராணுவப் பாதுகாப்புடன் சுவீகரிக்கப்பட்டது, அச்சுவேலி நெசவுசாலை.

அச்சுவேலியில் நெசவுசாலை இயங்கியது, 1980 இல் பிறந்தவர்களுக்குத் தெரியும். ஆனால், அச்சுவேலி நெசவுசாலையின் காணியும் கட்டடமும் அரசசொத்து என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் எவையும் எந்த அரச திணைக்களத்திலும் இல்லையா? இடையிட்டு இல்லாமல் செய்யப்பட்டனவா என்பது, 'தேவனுக்கே' வெளிச்சம்!


வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களம் வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் தேசிய கைத்தொழில்......... என மாகாண - மத்திய அரச நிறுவனங்கள் எவற்றிடமும், அச்சுவேலி நெசவுசாலைக் காணியின் உறுதி ஒரு அரசசொத்து என நிரூபிக்கும் ஆவணங்கள் எவையும் இல்லை, மல்லாகம் மாவட்ட நீதிமன்றில், வழக்காற்றுக்காக இந்நிறுவனங்கள் எவற்றிடமும் மேற்கேட்ட ஆவணங்கள் எவையும் இல்லை! இல்லை! இல்லை !!!


அயற்குடியிருப்பாளர்கள் தொடர்ந்த வழக்கில் நீதிமன்று வெளியிட்ட கட்டளையின் பிரகாரம் 'குறித்த காணியிலிருந்து சபையினரை வெளியேற்றியதற்கான' எந்தக்கட்டளையும்பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் சுற்றுச்சூழல் மாசுபடாமல் பிரார்த்தனை நிகழ்த்தவும் உரிய அரச நிறுவனங்களின் அனுமதியுடன் குறித்த காணியினுள் கட்டடத்தினை நிறுவவும் மன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

எல்லாம் அப்படியேயிருக்க, அச்சுவேலி நெசவுசாலைக் கட்டடத்தை கிட்டத்தட்ட 'மூன்று நட்சத்திர விடுதியாக' மாற்றி வைத்திருக்கிறார், சபையின் போதகர். பொலிஸுக்குப் போனால், 'காணி உறுதி' இல்லை என்று திருப்பியனுப்பப்படுகின்றனர். அரச அதிகாரிகள், போதகருடன் என்ன வழியிலான ஆதன ஆவணம் உள்ளதென்பதை யாரும் அறியார். வடக்கு மாகாண ஆளுநர்கள், நாடாளுமன்றம், பிரதமர், ஜனாதிபதி வரை முறைப்பாடுகள் விசாரணைகள் போய் வந்தாலும், இன்றுவரை போதகரின் குரங்குச் சேட்டையும், அத்துமீறிய காணிபிடிப்பும் தீர்வின்றித் தொடர்கின்றன.

அயலவரை அச்சுறுத்துதல், ஆபாசப் பேச்சு வழக்குகள், பிற மதத்தினரை இழிவுபடுத்தும் பரப்புரை பிரயோகங்கள், அச்சுவேலியில் ஆதரவின்றிக் கிடக்கும் காணிகளில் வேலியமைத்தல் என்று போதகரும் போதகரால் போசிக்கப்படும் சபை விசுவாசிகளும் 'கேட்பாரின்றித் தொடரும்' அட்டகாசங்களின் பின்புலம், தெளிவான 'அரசியல்'.

என்ன செய்யலாம். எம் தேசம் தான் ஆசியாவின் ஆச்சரியம் ஆயிற்றே!






# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

**தொடர்பு:**

**076 7390 413**

**076 4365 814**

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **அச்செழுப்** பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
  2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✓ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✓ 1 பரப்பின் விலை காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்,
- ✓ 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**

**077 9865 457**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி வடிவேலு பாக்கியதேவி



நாகர்கோவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், தம்பசிட்டியை வதிவிடமாகவும், கொக்குவில் கிழக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி வடிவேலு பாக்கியதேவி நேற்றுமுனதினம் (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் வடிவேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சுப்பர் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற தங்கமயில், கனகம்மா ஆகியோரின் சகோதரியும், துஸ்யந்தன் (USA), பத்மினி (France), விஜியந்தன் (France), யுகந்தினி (Canada), தர்சினி, புவியந்தன் (France), கஜேந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், றோகினிதேவி (USA), ரவிச்சந்திரன் (France), சுரேஜினி (France), குபேரரத்தினம் (Canada), பற்றிக்டிறஞ்சன் (செயலாளர் - உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாணம்), தர்ஷி (France), ராஜாராம் (Germany) ஆகியோரின் மாமியாரும், சரண்யா, கபிலன், கோபிசன், சினோஜா, றோசிகா, அனுசன், அனோசிகா, அபிராம், வினுஸ், வில்சன், விபிசன், பாருணி, நிவேதன், வித்யன், அனுஜிதன், ஹருணிகா, யனுஸ், டிவானி, ஜனகன், நிலவன், பிருத்திகா ஆகியோரின் பேர்த்தியும், சிம்ரா, சாறா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2023) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இல.72/19, பிரம்படிலேன், கொக்குவில் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
ம. பற்றிக்டிறஞ்சன்
(மருமகன்)

(CS/24406)AH-1

**071 809 8059**

தோற்றம் 06.03.1947 — மறைவு 09.04.2023

# சதுரங்கப்பயிற்சி வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 11

சிறகுகள் அமையம் மற்றும் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் சிறுவர்களுக்கான இலவச சதுரங்கப் பயிற்சி வகுப்பு, கோண்டாவிலில் அமைந்துள்ள எழுதிரள் பணிமனையில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது.

33 மாணவர்களுடன் ஆரம்பமான பயிற்சி வகுப்பு தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு சனி மற்றும் ஞாயிறு [illegible]ாங்களில் நடை[illegible]றவுள்ளது. சது[illegible]கப் பயிற்சியா[illegible]களாக சிறகுகள் [illegible]மையச் செயற்[illegible]ட்டாளர்கள் தன்[illegible]ார்வலர்களாகச் [illegible]யற்படு கின்ற[illegible]ர்.

[illegible]மாகாண ரீதி[illegible]ல் இந்தப் [illegible]பிற்சி வகுப்புக்[illegible] முன்னெடுக்[illegible]படவுள்ளமை [illegible]றிப்பிடத்தக்கது.

[illegible]14,66,159)

## Vacancy
### Company Sales Representative

- Minimum with 5 years Experience.
- Communication Ability in Sinhala, Tamil & English.
- Two Reputed Gurantors.
- A Security Deposit of Rs. 500,000.00
- Should be able to travel Island wide.
- Two wheeler - Lap Top - Smart Phone A must
- Computer / Social Media Litracy A must.
- Earnings in Excess of Rs. 150,000.00 per month.
- Age above 25 years.

(CS/49954)AH-1

**Forward your application to passconsultinglk@gmail.com**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு.

**நிலப்பரப்பு**

புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காப்பர் வீதியிலிருந்து இரண்டாவது காணி.

1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபா மட்டும் (125.000/=)

3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.

**தொடர்பு: 076 755 8606
077 6385 683**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 48 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
**(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் ( 200.000/= )
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

**தொடர்பு:- 076 733 6047, 076 333 6079, 076 733 6093**

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 08 . 1952

மறைவு 09 . 04 . 2023



## திருமதி கௌரி கேதீஸ்வரநாதன்

(அனலை வடலூர் அ.த.க.வித்தியாலய முன்னாள் ஆசிரியரும், அதிபரும்)

அனலைதீவு 2 ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும் நிரந்தர வாழ்விடமாகவும், Mississauga - Canada வை சிறிது கால வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கௌரி கேதீஸ்வரநாதன் நேற்றுமுன்தினம் (09.04.2023) ஞாயிறு அதிகாலை அனலைதீவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராஜா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் கேதீஸ்வரநாதன் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மனைவியும், பிரபாகரனின் (கனடா) பாசமிகு தாயாரும், திருமதி சகிதா, திலீபன் (கொழும்பு களுபோவில - வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், Dr. காயத்திரி (காஷல் வைத்தியசாலை - கொழும்பு), வசீகரன் (UK), ஜனார்த்தனன் (UK) ஆகியோரின் பெரியதாயும், ஸ்ரீனிகா, ஹரினிஸா, அஸ்மிதா, காவியா, அபிநயன் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும், திருமதி கௌசலா அவர்களின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற வைத்தீஸ்வரமூர்த்தி மற்றும் இராஜேஸ்வரன், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் திருமதி சுந்தரேஸ்வரி வெற்றிவேல், காலஞ்சென்ற ஞானேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், திரு. திருமதி உதயகுமாரன் இலக்கினேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2023) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சக உத்தியோகஸ்தர்கள் மற்றும் பழைய மாணவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

+ 1 416 938 3768
+ 94 77412 9928

தகவல்:
மகன். பிரபா கேதீஸ்

(CS/49955)AH-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
[illegible]த்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.